திருவள்ளுவர் ஆண்டு 2037

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி :10 அக் -07

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	செயலாளர்
திரு. இரா குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. பி. வீரணன்	உறுப்பினர்
	உறுப்பினர்

கல்லூரிக் குழு

திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	தலைவர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்
டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி.,	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 10
***அக்டோபர்* 2007**

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2037**

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	

ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் இரா. **சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பொருளடக்கம்

இதழ்மணம் 373

தி.க.சி. என்ற விமர்சன விஞ்ஞானி 374

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

பாண்டியானை 383

ஜெ. அரங்கராஜ்

பாற்கர சேதுபதி நான்மணிமாலை 389

ஆசிரியர் : சிவசம்புப்புலவர்

விளக்கவுரை ஆசிரியர் : பேராசிரியர் இரா. சதாசிவம்

புலவர் குழந்தையின் திருக்குறள் சிந்தனைகள் 404

செ. வெங்கடேசன்

இதழ்மணம்

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம் எழுதிய தி.க.சி. என்ற விமர்சன விஞ்ஞானி என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. தி.க.சியின் விமர்சனப் பணியின் தாக்கம் இந்த நூற்றாண்டில் தமிழ் எழுத்துலகில் முற்போக்கு எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளதையும் அவர்கள் தமிழ் எழுத்துலகில் புதிய சிந்தனைப் பரப்பை விரிவுபடுத்தியுள்ளதையும் ஆசிரியர் தம் கட்டுரையில் தெளிவாக விளக்கியுள்ளார். தி.க.சி–யின் விமர்சனப் பணியை இலக்கிய வரலாற்று நோக்கில் ஆசிரியர் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் ஜெ. அரங்கராஜ் பாண்டியானை என்னும் தலைப்பில் தமிழகத்தில் ஆசீவகசமயச் செல்வாக்குப் பரவலாக இருந்திருக்க வேண்டும் என்பதைத் திறம்பட விவரித்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் செ. வெங்கடேசன், புலவர் குழந்தையின் திருக்குறள் சிந்தனைகள் என்னும் தலைப்பில் புலவர் குழந்தையின் திருக்குறள் உரைகுறித்த கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். புலவர் குழந்தையின் திருக்குறள் உரைச் சிறப்பையும் அவ்வுரையைப் பார்த்துப் பலரும் திருக்குறளுக்கு உரை எழுதத் துணிந்துள்ளனர் என்னும் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாட்டுப் பெரும்புலவர்கள் பலரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் தடம் பதித்துள்ளனர். அவர்களில் சிவசம்புப் புலவர் குறிப்பிடத்தக்கவர். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நான்காம் தமிழ்ச் சங்கம் எனப் போற்றப்படுகின்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கித் தமிழ் நிலைபெறச் செய்த சான்றோர்கள் பாற்கர சேதுபதியும், பாண்டித்துரைத் தேவரும் ஆவர். இருவரையும் குறித்துச் சிவசம்புப்புலவர் எழுதிய நூல்கள் குறிப்பிடத்தக்கன. அப்பெருமக்களுடைய வரலாற்றுச் சிறப்பையும் வாழ்க்கை மாண்பையும் உலகவர் அறிந்து போற்றும் வண்ணம் ஈழநாட்டுப் பெரும்புலவரும் மெய்யுணர்வாளருமாகிய சிவசம்புப் புலவர் அரிய கருத்துக் கருவூலமாகப் பாற்கரசேதுபதி நான்மணிமாலை, பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை என அரிய செய்யுள் நூல்கள் எழுதியுள்ளார். இவ்விதழில் பாற்கர சேதுப்தி நான்மாலைச் செய்யுட்களுக்கு விளக்கம் வெளிவருகிறது. அறிஞர்கள் கற்றுக் கருத்துத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

தி.க.சி. என்ற விமர்சன விஞ்ஞானி

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

"ஐந்து வயது மகள் கோலமிட்டால் அதை
அழகில்லை என்று அழிக்கும் தாயாருமுண்டோ?"

கவிமணி தேசியவிநாயகம் பிள்ளையின் பாடல் வரிகள் இவை. கவிமணியால் சுட்டிக்காட்டப்பட்ட கண்மணிதான் திருநெல்வேலி கணபதியப்பன் சிவசங்கரன் என்ற 82 வயது வாலிபர். இளம் தலைமுறையினருக்குத் தோழனாய், துணையாய், வழிகாட்டியாய் உள்ள தி.க.சியை எழுத்துலகப் பயணத்திற்கு வழிகாட்டியவர் பேராசிரியர் நா. வானமாமலை; நாத்திகராக மாற்றியவரும் இவரே. இப்பூமி தமிழ்கூறு நல்லுலகம் போற்று தென்றலின் தாயகம் திருநெல்வேலிச் சீமை, பொதிகைமலையும் தமிழ் கண்டதோர் பொருநை ஆறும் ஐவகை நிலங்களையும் கொண்ட பூமி.

தென்பாண்டி சீமை தந்த இலக்கிய மணிகளின் பெயர்களைப் பட்டியலிட்டால் அது நீளும். அவர்களுள் டி.கே.சி. தி.க.சி. ஆகிய இருவரும் முழுப்பெயரைச் சொல்லாமலே முன் எழுத்துக்களால் நாடறிந்தவர்கள். இன்னொரு ஒற்றுமை, இருவருக்கும் ஒரு 'திருக்கூட்டம்' உண்டு. டி.கே.சி.க்கு கம்பர் கூட்டம். தி.க.சிக்கு கார்ல்மார்க்சின் அன்பர் கூட்டம்.

ஒரு எழுத்தாளனின் வெளிப்பாடு

கடந்த 60 ஆண்டுகளாக விமர்சகராக, படைப்பாளியாக, பத்திரிக்கையாளராக, மொழிபெயர்ப்பாளராக, தொழிற்சங்கவாதியாக தடம் பதித்து வந்துள்ள அவரது வாழ்க்கைச் சுவடுகள் இளம் எழுத்தாளர்களுக்கு கைக்காட்டி மரமாகத் திகழ்கிறது. வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இலக்கியம் ஒரு சாதனம். "எழுத்தாளனுடைய பேனா சமுதாய விரோதிகளுக்கு எதிரான வாளாகவும் மக்களுக்கு கேடயமாகவும் விளங்கவேண்டும்" என்று கூறியவர் தி.க.சி.

விரிவுரையாளர், கல்வியியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-23

எழுத்தாளன் என்பவன் மனிதனை நேசிக்க வேண்டும். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று நிரம்பியவனாய், அன்புள்ளம், அறவுள்ளம், ஆளுமையுள்ளம், பூண்டவனாய் இருப்பது அவசியம். இன்றைய தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல் (Liberalization, Privatization, Globalization-LPG) சூழ்நிலையில் ஒரு படைப்பாளி என்பவன் தனித் தீவாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முடியாது.

ஒவ்வொரு படைப்பாளனுக்கும் தெளிவான தொலைநோக்கப் பார்வையும் சமுதாயக் கட்டுப்பாடும், சமுதாயத்திற்கு செய்யவேண்டிய கடமைகளை ஏற்கும் துணிவும் வேண்டும். இதழாளர் பங்களிப்பும் புதியப் படைப்பாளர்களை உருவாக்கும் முறைகளும் நடுநிலை மாறாத பண்புகளும் கொள்கை நேர்மையில் கட்டுப்பாடு உணர்வும் முழுமையாகக் கொண்டு வரப்பட வேண்டும். ஏனெனில் இன்றைய இலக்கியத் துறையினர் பலருக்கு இவை எடுத்துக்காட்டுக்களாக, வழிகாட்டுதலாக அமையும். மகாகவிபாரதியார் முதல் மாக்சிம்கார்க்கி வரை "சுதந்திரம், ஜனநாயகம், சமநீதி போரற்ற புது உலகு" என்ற விழுமங்களுக்காகவே தனது வாழ்க்கையையும் எழுத்தையும் அர்ப்பணித்தார்கள். இன்றைய காலக்கட்டத்தில், மனித உரிமை, மனித விடுதலை மனிதகுல முன்னேற்றத்திற்காக தங்களது தூரிகையை ஒரு போராயுதமாகப் பயன்படுத்திட வேண்டும்.

விமர்சனத்துக்கு விதை

1936 ஆம் ஆண்டு இந்தியாவில் விடுதலைவேள்வி கொழுந்து விட்டெரிந்த நேரம். நெல்லையிலும் போராட்டம். ஜவுளிக்கடை மறியல், ஆர்ப்பாட்டம் எல்லாம் நடந்தன. தெருவில் தேசபக்திப் பாடல்களான பாரதியின் பாடல்களை பாடிக்கொண்டு தெருத்தெருவாகப் போவார்கள். கதராடை, தலைப்பில் காந்திக் குள்ளாய் அணிந்து பகத்சிங்கின் படத்துடன் எம். ஆர். சுப்ரமணியம் சென்ற கம்பீரக் காட்சி தி.க.சி.யின் விடுதலை உணர்வை மேலும் தூண்டியது. – அரசியல் ஆர்வம் தலைதூக்கியது. இப்படி அரசியல் முடிந்து கல்லூரிப் படிப்பை பாளையங்கோட்டை சவேரியார் கல்லூரியிலும், நெல்லை இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்தார். இந்துக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் கு. அருணாசலக்கவுண்டர். ஆ. முத்துசிவன் இருவரும் மாணவர்களுக்குத் தமிழிலக்கிய உணர்வை ஊட்டுவதில் அக்கறைக் காட்டினர்.

இந்தச் சமயத்தில்தான் 1941ன் பிற்பகுதியில் வல்லிக்கண்ணன் நெல்லைக்கு வந்து சேர்ந்தார். எழுத்தாளனாக வளர வேண்டும் என்ற உந்துதலோடு, நெல்லையில் வசித்த தனது அண்ணன் கோமதிநாயகம். அம்மா ஆகியோருடன் தங்கியிருந்தார். இந்தக் காலத்தில் இந்துக் கல்லூரியில் நிகழ்ந்த இலக்கிய நிகழ்ச்சி ஒன்று தி.க.சி. க்கு அழுத்தமாகப் பதிந்தது. அப்போது அ. சீனிவாசராகவன் இக்கல்லூரியின் பேராசிரியர். இருவரும் புதுமைப்பித்தனும் நண்பர்கள். புதுமைப்பித்தன் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர். அ.சீ.ரா. ஏற்பாட்டின்படி, புதுமைப்பித்தன் சொற்பொழிவாற்றினார். அந்த அருவி போன்ற சொற்பெருக்கில் நனைந்த தி.க.சி. தன்னை இலக்கியப் பணிக்கு – விமர்சனப் படைப்புக்கு – உட்படுத்திக் கொள்ளத் தூண்டியது இன்று வரை மாறவேயில்லை.

தாமரைக் கூட்டம்

'தாமரை' முற்போக்கு இலக்கிய இதழின் ஆசிரியர் பொறுப்பை 1973ல் ஏற்றது தி.க.சியின் எழுத்துலக வாழ்க்கையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒன்று. இன்று பிரபலமாக விளங்கும் பல எழுத்தாளர்களுக்கு 'தாமரை' ஒரு நாற்றங்காலாக விளங்கியது. பிரபஞ்சன், பா. செயப்பிரகாசம், பூமணி, வண்ணநிலவன், கோ. ராசாராம், சேலம் தமிழ்நாடன், ஆ. மாதவன், அழ. கிருஷ்ணமூர்த்தி என தடாகத்தில் வளர்ந்த மலர்கள். தமிழ் இலக்கியத்திற்கு அதுவும் இடதுசாரி இலக்கியத்திற்கு தி.க.சி. மிகப்பெரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார். இவரால்தான் இன்றைக்கு இருக்கும் எழுத்தாளர்களில் பலர் நமக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

சமச்சீர் நிலமை

82 வயதான எழுத்தாளர் என்ற அளவிலும் 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் திறனாய்வுத் துறையில் இயங்கி வருபவர் என்ற வகையிலும் அவரை செதுக்கியவர்களின் பட்டியல் நீண்ட நெடியது எனினும் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மகாகவி பாரதி புரட்சிக் கவிஞர், மணிக்கொடி என்ற இலக்கிய மறுமலர்ச்சி இதழின் மூலவர் வ.ரா. எனும் வ.ராமஸ்வாமி, ஜனசக்தி எனும் பொதுவுடைமை இதழின் ஆசிரியர் தோழர் ஜீவானந்தம் ஆகிய இந்த 'நால்வர் அணி' தி.க.சி.யின் வாழ்க்கைத் தத்துவ நடைமுறைகளுக்கு வழிகாட்டியவர்கள்.

விமர்சனம், கலையாக தனி இலக்கிய வகையாக வளரவில்லை என்பது தமிழில் பெருங்குறை. திறனாய்வு என்ற புதிய இலக்கியத்துறைக்கு வரவேற்பும் இல்லை. மரியாதையும் இல்லை. இன்றுமட்டுமல்ல என்றுமே இதே நிலைதான், நேர்மையான விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் மனிதர்களுக்கு – தமிழர்களுக்கு மட்டுமல்ல – கடவுளுக்கும் இருந்ததில்லை என்பதற்கு சிவன் – நக்கீரன் கதை உதாரணம்.

விமர்சனத்துறையில் படைப்புகளைப் பாராட்டுவது ஒருவகை. படைப்பாளிகளைப் பாராட்டுவது ஒருவகை. இவை இரண்டிலிருந்தும் மாறுபட்டவர் தி.க.சி. படைப்புகளைப் பாராட்டுவது மட்டுமே என்றால், அது மதிப்புரை ஆகும். எழுதியவர் யார் எவர் என்பதை முக்கியப்படுத்தாமல் படைப்பு எப்படி இருக்கிறது என விமர்ச்சிப்பவர் தி.க.சி. சமுதாயப் பார்வையில் படைப்புகளை விமர்சிக்கும் ரகத்தைச் சேர்ந்த தி.க.சி. பேராசிரியர் நா.வா, கைலாசபதி க. சிவத்தம்பி, தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோர் வரிசையில் சேர்கிறார். தி.க.சி. கதை எழுதியிருக்கிறார். கவிதை எழுதியிருக்கிறார். கட்டுரை எழுதியிருக்கிறார் என்றாலும் அவரைத் தமிழ் கூறும் நல்லுலகின் தலைசிறந்த விமர்சகர் என்றே மதித்துக் கொண்டாடுகின்றனர். அந்த மதிப்பீடு சரிதான் என்பதை அங்கீகரிக்கும் வகையில் கோவை விஜயா பதிப்பகம் வெளியிட்ட 'மதிப்புரைகள் விமர்சனங்கள் – பேட்டிகள்' என்ற நூலுக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கி சிறப்பு செய்தது.

ஒரு எழுத்தாளனுக்குக் கிடைக்கும் பரிசுகள், விருதுகள், கௌரவங்கள் எல்லாமே – எல்லா எழுத்தாளர்களுக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்என்று பல சந்தர்ப்பங்களில் சொல்ல முடிவதில்லை. ஆனால் தி.க.சி.க்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்தது குறித்து ஏராளமான எழுத்துலகச் சிற்பிகள் இந்தக் கௌரவம் தனக்குக் கிடைத்த கௌரவம் என்றே மகிழ்ந்தனர். காரணம், முற்போக்கு எழுத்தாளர்கள் – எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று நினைக்காமல் சமூகப் பண்பாட்டுக்கு, சமூக விழிப்புணர்வுக்கு, மனிதநேய வளர்ச்சிக்கு உதவும் வகையிலேயே எழுத வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டு எழுதி வரும் எழுத்தாளர்கள் பலரும் தி.க.சியால் கண்டுபிடிக்கப்பட்டவர்கள்.

தகுதியான விமர்சனம்

தி.க.சி.யின் விமர்சனம் அறிவியல் ரீதியாக, ஆழச்சிந்தித்ததாக இருக்கும். அதனால்தான் இவரை 'விமர்சன விஞ்ஞானி' என்று கூறுகிறார்கள். ஒரு திறனாய்வுத் திலகமாகத் திகழ்வதற்கு, வரையறையின்றி வருவதையெல்லாம் படிக்கும் நல்ல வாசகர் என்பதால்தான் ஆளைப் பார்ப்பதில்லை. நூலைப் பார்க்கிறார் நூலின் தரத்தைப் பார்க்கிறார்; தோழமை, நட்பு, பழக்கம் என்ற உறவுகள் இவரது திறனாய்வுக்குத் தடைகளாகவோ, ஆதரவாகவோ அமைந்ததில்லை. தன்னுடைய முன்னோடியான வல்லிக்கண்ணின் சிறுகதைத் தொகுதியினைப் பற்றிய திறனாய்வில்கூட. கருத்துக்களை வெளிப்படையாக மறுத்துரைத்தார். திராவிட இயக்க எழுத்துச் சீர்திருத்தத்தை முற்றிலும் புறக்கணிப்பது அல்லது ஒதுக்கி விடுவது என்று இலக்கிய உலகத்தின் பெரும் பகுதியினர் மேற்கொண்டிருந்தபோது அவற்றின் பங்களிப்பினை தி.க.சி. மறுக்கவில்லை.

அழகியலும் அறிவியலும் அறநெறிப் பண்புகளும் நவீன சிந்தனையின் மூன்று அடிப்படைக்கூறுகள் என்று அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். "வாழ்க்கை என்பது உயிரோடு இருக்கிறவரை திருத்தப்பட்டு, மரணத்திற்குப் பிறகு படிக்கப்படுகின்ற மாபெரும் கவிதை" என்றார் கண்களற்ற நிலையில் 'இழந்த சொர்க்கம்' (The Paradise Lost) கண்ட ஜான்மில்டன். "நிகழ்காலம் என்னை நிராகரிக்கிறது என்றால் வருங்காலம் என்னை வரவு வைத்துக் கொள்ளும்" – வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான் மனம் கசிந்து கூறிய வார்த்தைகள் இவை. இந்த எளிய சொற்களில்தான் எத்தனை உண்மைகள் பரவிக்கிடக்கின்றன. இவ்விரு அரியக் கருத்துகளுக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு ஆன்மீகம் முதல் அறிவியல் வரையிலும் சினிமா முதல் சீர்படுத்தும் சமுதாயநெறிகள் வரையிலும் விமர்சித்தவர் தி.க.சி.

> "இலக்கியம் என்பது யதார்த்த வாழ்க்கையிலிருந்து எழுகிறது. அந்த யதார்த்த வாழ்க்கை. சமுதாயத்தினால் சமைக்கப்பெறுகிறது. சமுதாயம் இல்லாமல் தனிமனிதன் இல்லை. ஆகவே, இலக்கியம் என்பது தனி மனிதனை ஊற்றுக் கண்ணாகக் கொண்டு பிறந்தாலும், கங்கையைப் போல், காவிரியைப் போல், பொருநையைப் போல் சமுதாயத்தின் சொத்து".

- "கலை வேறு. அரசியல் வேறு என்பவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம், சோசலிசம் ஆகியவற்றின் விரோதிகள் ஆகிறார்கள். காலத்தின் வீச்சையும், சமுதாயத்தின் முற்போக்கையும் எதிர்க்கிறவர்கள் இவர்கள். கலை என்பது அரசியலுக்கு உட்பட்டதுதான். இதுவே சமுதாய வளர்ச்சியின் விதியாகும். இந்த விதி முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் பொருந்துவதாகும்" என்று தனது விமர்ச்சனப் பக்கங்களில் பதிய வைத்தவர்.

- "அண்ணாமலை செட்டியார் ஆதரவுடன் டி.கே.சி. பேரார்வத்துடன் தோற்றுவித்த தமிழிசை இயக்கம், தாமிரபரணி நதி இப்போது வறண்டு கிடப்பதுபோல உள்ளது. தமிழிசையின் மூலவர் டி.கே.சி தமிழிசைக்காக எழுதி வந்த 'கல்கி'யும் 'இராசாசி'யும் இன்றில்லை. தமிழிசையும், தமிழ் பாடகர்களும், பாடல் இயற்றுவோரும் ரசிகர்களும் அநாதைகளாகக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். இந்த அவல நிலை வெகு விரைவில் மாற்றப்பட ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் உடனடியாக முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று (தினமணி – 01.09.1997) தமிழிசை குறித்த தனது தாகத்தை இப்படிக் கூறுகிறார்.

- "சமுதாயத்தில் உள்ள ஏழை – பாழைகளை, அநாகரிகச் சின்னங்களை, புகலிடம் அற்றோரை, புறக்கணிக்கபட்டோரை வரவேற்கிறோம். ஆனால், அவர்கள் ஏன் அநாகரிகச் சின்னங்களாக ஆனார்கள்? அப்படி ஆக்கியது யார்? என்பதையும் அவர் எடுத்துக்காட்ட வேண்டும்" என்று ஜெயகாந்தனின் முதல் சிறுகதைத் தொகுப்பு பற்றிய தனது விமர்சனத்தில் மேற்கண்டவாறு கூறுகிறார்.

- "சேரன் செங்குட்டுவன் என்று சொல்கிறோம். கனகவிஜயன் தலையில் கல் எடுத்து வந்தோம் என்று சொல்கிறோம். ஆனால், ஐந்தாம் வகுப்புவரைக்கூட தமிழைக் கொண்டுவர முடியவில்லை. தன்மான இயக்கம் என்று ஒரு இயக்கம் உண்மையிலேயே இருக்குமானால் அது தமிழைக் கல்வி மொழியாக்கும் இயக்கமாத இருக்க வேண்டும்" என்கிறார் தி.க.சி இதுதான் அவரது விமர்ச்சனத் திட்டம்.

தி.க.சி.பன்முகத் தன்மை கொண்டவர் எனினும் ஒவ்வொன்றிலும் முரண்களோ – சிக்கல்களோ – மோதல்களோ – இல்லாமல் தமது பல்வேறு பணிகளையும்ஒருங்கிணைத்துச் செயல்பட்டு வருபவர். இதற்குத் துணையாக இருப்பவை இவர் கொண்டுள்ள கொள்கைத் தெளிவு. தத்துவப் பின்னணி உலகு குறித்த சமூக – பொருளாதார – பண்பாட்டுக் கண்ணோட்டம், இயக்கத் தொடர்பு, இன்றியமையாத மனித நலம்.

புதிய பரம்பரையின் வித்து

பதினெட்டு அகவையில், வல்லிக்கண்ணனின் 'இளந்தமிழன்' என்ற கையெழுத்து இதழில் எழுதத் தொடங்கினார். நாரண துரைக்கண்ணனின் பிரசண்ட விகடன் இதழில் எழுதிய முதல் சிறுகதை 1942ல் வெளியானது. அன்று முதல் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக தி.க.சி.யின் எழுத்துப்பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பொதுவுடைமை இயக்கத்தினருக்குப் பாரதிதாசனை ஏற்பதில் – மதிப்பீடு செய்வதில், முன்னிலைப்படுத்துவதில் – தடையிருக்கிறதோ என்ற ஐயம் தோன்றியிருந்த காலக்கட்டத்தில் தாமரையில் 'பாரதிதாசன் சிறப்பிதழ்' தி.க.சி.யால் வெளியிடப்பட்டு சிந்தனைத் தொடர்ச்சிக்கு காற்புள்ளியிட்டதின் விளைவு கடந்த ஐம்பதாண்டுக் காலத்தில் தமிழ் இயக்கம் அறிவியக்கம். தன்மான இயக்கம், தொழிலாளர் இயக்கம், பெண்விடுதலை இயக்கம், சமதர்ம இயக்கம் ஆகியவற்றுக்குப் பாரதிதாசன் வழங்கியுள்ள சிந்தனைகள் எழிலும் ஏற்றமும் எழுச்சியும் பெற்று தமிழகக் கலை இலக்கியத்துறையில் 'பாரதிதாசன் பரம்பரை' என்னும் ஒரு புதிய பரம்பரை தோன்றிடக் காரணமாக அமைந்தன.

தனிச்சிறப்பு

நிறைகளை எடுத்துக்கூறி குறைகளைத் திருத்திக்கொள்ள வாய்ப்பளித்து, தாமே பயிற்சிக் களமாக அமைந்து, ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்தினார். தான் சார்ந்திருந்த – பொதுவுடைமை – இயக்கத்துக்கு அப்பால் இருந்தாலும் அவர்களது எழுத்துக்களில் காணப்பட்ட மனிதநல நாட்டத்தையும் சமூக நோக்குப் பார்வையையும் கண்டுபிடித்து அவர்களை வரவேற்றார். வழிப்படுத்தினார் வேற்றுமைகளிலும் ஒற்றுமை காண்பதில் உறுதியான நோக்குக் கொண்டிருக்கும் தி.க.சி.எந்த ஒற்றுமையும் காண முடியாதவர்களை

புறக்கணிக்கத் தயங்கியதில்லை. இங்குதான் தி.க.சி. யின் தனிச்சிறப்பு வெளிப்படுகிறது. 1952ல் பராசக்தி திரைப்படம் வெளியானபோது. "அற்புதமான நடிப்பு, அனல் பறக்கும் வசனங்கள்" என்ற உண்மை நிலையை உறுதிப்படக் கூறினார். இதனால்தான் தி.க.சி. யின் கொள்கை நிலைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட அவரை புறக்கணிக்கவோ, ஒதுக்கித் தள்ளவோ முடியாமல் இருக்கிறார்கள்.

கலைஇலக்கிய உலகில் அஞ்சல் அட்டையின் வழியாகப் பல மாற்றங்களை, ஏற்றங்களை உருவாக்கி வரலாறு படைத்தவர். தாமரையில் வெளியிடமுடியாத படைப்புகளைப் பற்றிக்கூடக் கருத்துக்களைக் கூறி இளம் எழுத்தாளர்கள் தொடர்ந்து எழுத உற்சாகம் ஊட்டுவதற்கு இந்த அஞ்சலட்டைதான் பயன்பட்டது. இலக்கியச் சிந்தனைகளும் களப்பணிகளும் சமுதாய விழிப்புணர்வுக்காகவும் மனிதகுல மேன்மைக்காகவும் தொடர்ந்து எழுதி வருகிற கடிதங்களும் குறிப்புகளும் உரிய பலன் அளித்துள்ளன. அளித்தும் வருகின்றன. விழிப்புணர்வையும், செயலூக்கத்தையும் உழைக்கும் உற்சாகத்தையும் தி.க.சியின் விமர்சனம் படைப்பாளனிடம் மட்டுமன்றி படிப்பவரிடமும் வளர்த்தது.

இந்தச் சமுதாயத்தின் உறுப்பினன் என்ற வகையில் பல இலக்கிய நடப்புகளுக்கும் பண்பாட்டு வெளிப்பாடுகளுக்கும் – கலை முயற்சிகளுக்கும் இவரது அஞ்சலட்டை, கருத்து தெரிவிக்கும் கருவியாக அன்றும் இன்றும் அமைந்திருக்கிறது. மொழி இலக்கியம், சமூகம் சார்ந்த எதுவாக இருப்பினும் தனக்குஉடன்பாடில்லாததாகவோ, அல்லது மனித நலனுக்குப் புறம்பாக இருப்பதாக கருதினாலோ அது குறித்து, சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படையாவும் தனது நிலைப்பாட்டினை உடனடியாக எழுதி விடுவார். அது தனி மனிதருக்கு எழுதப்படும் மடலாகவோ, இதழ்களுக்கு அனுப்பப்படும் 'ஆசிரியர்களுக்கான மடலாக'வோ அமையும்.

பல்வேறு தளங்களை நோக்கி – வளர்ச்சிகளை நோக்கி – மனித மனம் நகர்வதைப் படைப்பாளி உருவகப்படுத்த வேண்டும் என்ற விரிந்த மனப்போக்குக் கொண்டவர். இந்த அறிவியல் அடிப்படையிலான மெய்யியலே மார்க்சியம் என்பதில்தான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறார். கொண்ட கொள்கைகளின்பால் பற்றுறுதி கூட்டு முயற்சியில் செயல்படுவது, புரட்சித் தன்மையுள்ள மனிதநலச் சார்புடையவராய் விளங்குதல் என்ற அடிப்படைகளை ஏற்படுத்திக் கொண்டு, மனிதன்

தன்மீது நம்பிக்கையும் மனித வாழ்வின்மீது நம்பிக்கையும் கொள்ளவேண்டும் என்றும் இதனை மனித உள்ளத்தில் வலுப்படுத்த இலக்கியம் பயன்பட வேண்டுமென்றும் போராடி வருகிறார். தமிழகத்தின் மிகச்சிறந்த திறனாய்வாளராக மேலோங்கி நிற்கும் தி.க.சி.யின் முழுமையான பங்களிப்பு குறித்த விபரங்கள் இன்னும் வெளிப்படவில்லை என்றுதான் கூற வேண்டும்.

விமர்சனத்துறை

தி.க.சி. தனி மனிதரல்லர். ஒரு மெய்யியலின், கொள்ளை நிலையின் சார்பாளர். நல்ல நண்பர், பண்பாளர், எளியவர், தன்னை முன் நிறுத்தாத கடமையாளர். தமிழியம், பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம், சுற்றுச் சூழலியம் ஆகிய ஐந்து கொள்கைகளும் ஒன்றிணைந்து செயல்பட்டால்தான் முழுப்பயன் கிடைக்கும் என்பதை இடைவிடாது கூறிவருகிறார்.

தமிழ்நாட்டில் படைப்பாளர்கள், ஆய்வாளர்கள், சிந்தனையாளர்கள் என்று தத்தம் துறைகளில் தனிச்சிறப்புப் பெற்றவர்கள் கூட தமக்குப் பிறகு எவரையும் உருவாக்காமல் – தமது வழித்தோன்றல்களை உருவாக்காமல் – தனி மரமாகவே நின்றுவிட்டுப் போயிருக்கிறார்கள் அல்லது நின்று கொண்டிருக்கிறார்கள். பல இயக்கங்களுக்குக்கூட இதே நிலைதான். தனது நோக்கினாலும் போக்கினாலும் தமக்கு வழித்தோன்றல்களை உருவாக்கிக் கொள்ளாதவர்கள் மிகச்சிலரே. பாடல்களில், ஆய்வுத் துறையில் நா. வானமாமலையின் மாணவர்கள். அவரது வழியினராக நின்று அவர் விட்டுச் சென்ற ஆய்வுப் பணிகளை இன்றும் விடாமல் மேற்கொண்டு வருகிறார்கள். அதுபோல படைப்பிலக்கியத் துறையில் தி.க.சி. யால் உருவாக்கப்பட்டவர்கள் என்ற பெருமைகொள்ளும் ஒரு பெரும்படையினர் இன்றும் களத்தில் அணிவகுத்து முன்னணி எழுத்தாளர்களாக இருந்து வருகிறார்கள். இவர்கள் யாவரும் அடுத்தடுத்த தலைமுறையினரை உருவாக்கும் வல்லமை கொண்டவர்கள்; புதிய புதிய தலைமுறையினரை உருவாக்குபவர்கள். இதில்தான் தி.க.சி. வாழ்கிறார். என்றும் வாழ்பவர்.

பாண்டியானை

ஜெ. அரங்கராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பாண்டியரின் வரலாற்றில் ஒரு அரிய புதிய செய்தி எனும் சிறுநூல் மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. அண்மையில் அவரின் கட்டுரைத் தொகுப்பில் அதுவும் ஒரு கட்டுரையாகச் சேர்த்து வெளியிடப்பட்டன. அக்கட்டுரையில் சங்க இலக்கியங்களை ஆய்ந்த அறிஞர்கள் குறிப்பிட்டிராத ஒரு பாண்டிய மன்னனைக் குறிப்பிடுகிறார். அப்பாண்டியனின் பெயர் பசும்பூண்பாண்டியன் எனவும், அவன் அதிகன் நெடுமிடல் அஞ்சியைப் படைத்தலைவனாகக் கொண்டிருந்தான் என்பதனையும் அப்பாண்டியனின் சின்னமாக யானை விளங்கியது என்றும் தகுந்த சான்றுகளின் வழி விளக்குகிறார். ஆனால் யானை பாண்டியனின் சின்னமாக எங்ஙனம் ஆயிற்று என்பதற்கான காரணத்தை அவரும் அவருக்குப் பின்னர் வந்த அறிஞர்கள் யாரும் விளக்கவில்லை. அதற்கான காரணத்தை ஆய்வோம்.

வரலாற்றின் தொடக்ககாலம் தொட்டே மீனவன் என போற்றப்படும் பரதவர்களாகிய பாண்டியர்களின் சின்னம் மீன் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறிருக்க யானைச் சின்னம் எவ்வகையில் இடம் பெற்றது என்னும் வினா எழுகிறது. மேலும் மயிலையார் சுட்டிக்காட்டிய நாணயத்தின் ஒருபக்கம் மீன் சின்னமும் இடம் பெற்றுள்ளது. அங்ஙனமாகில் பசும்பூண்பாண்டிய மன்னன் இரண்டு சின்னங்களைக் கொண்டிருக்க வேண்டியதன் தேவை யாது? எனும் போக்கில் நாம் ஆய்கின்ற பொழுது அக்காலச் சூழலியலின் அடிப்படையில் கருத்துக்கள் எழுகின்றன. ஒரு மன்னன் தமது நாணயத்திலும் கொடியிலும் வெளியிடும் சின்னமானது தமது தேசியத்தின், குடியின் சின்ன்மாகவே இருக்கும். அவ்வாறான குடிச் சின்னத்துடன் வேறு சில சின்னங்கள் வெளியிடப்பட்டமையையும் நாம் வரலாற்றில் காண இயலும் குப்தர்கள் தங்களது சின்னத்துடன் இந்துசமய தெய்வவடிவங்களை வெளியிட்டனர். சாதவாகனர்களும், கிரேக்கர்களும் தங்களது சின்னங்களை போன்றே சமய சின்னங்களையும் வெளியிட்டுள்ளனர். இதன் வழி ஒரு மன்னனின் குடிச்சின்னத்துடன் அவனது சமயச் சின்னமும் அதற்கு இணையான சிறப்பு பெற்றமையை அறியலாம்.

அதன்வழி

"மறஞ் சாய்த் தெழுந்த வலனுயர் திணிதோள்
பலர்புகழ் திருவிற் பசும்பூண் பாண்டியன்"

(அகம் 338 4-5)

என மதுரைக் கணக்காயனாரால் சுட்டப்பட்டு மயிலையாரால் இனம் காணப்பட்ட பசும்பூண் பாண்டியன் தமது குடிச்சின்னத்தைப் போல் சிறப்பித்தும் இணைத்தும் யானைச்சின்னத்தை வெளியிட்டமை, யானை அவனது சமயச் சின்னமாகவும் பாண்டிநாட்டின் சமய அடையாளமாகவும் விளங்கியது என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

பௌத்தர்கள் குதிரையைத் தங்கள் குறியீடாகக் கொண்டமை போலும், சமணர்கள் எருதினைப் போற்றியமை போலும் அன்றைய காலத்தில் ஆசிவகமே வெள்ளை யானையைத் தங்கள் சமயச் சின்னமாகப் போற்றியது. பசும்பூண்பாண்டியனுக்கும் அவனது பாண்டியநாட்டிற்கும் ஆசிவகத்தினுடனான தொடர்புகளைக் காணலாம்.

சமணசமயம் பாண்டிநாடு வருவதற்கு முன்பே தமிழகத்தில் ஆசிவகசமயம் இருந்தது என அறிஞர் பலர் கருதுகின்றனர். ஆசிவகம் தமிழரின் அனுவியக்கோட்பாடே என்று அறிஞர்பலர் கூறுகின்றனர். மேலும் சித்தன்னவாசல் குடவரையைப் பாண்டிய மன்னன் தலையாலங்காணத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், முக்கல்ல ஆசான் நல்வெள்ளையார் எனப்படும் கணிநற்றாசிரியன் எனும் ஆசீவகத் துறவிக்கு எடுப்பித்ததாக க.நெடுஞ்செழியன் குறிப்பிடுகிறார். அவர் கூற்றின் வழி அங்குக் காணப்படும் ஓவியங்கள் சில நூற்றாண்டுகளுக்குப்பின் மீண்டும் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் அவ்ஓவியத்தில் காணப்படும் தாமரைக்குளம் வெள்ளை யானை முதலியவற்றை ஆசீவகத்தின் குறியீடாகக் குறிப்பிடுவர். இதன் வழியும் நெடுங்காலத்திற்கு முன்பே பாண்டி நாட்டில் ஆசிவகம் பரவியிருந்தமையை அறியலாம். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்தில் மதுரையில் ஆசீவகப் பள்ளிகள் இருந்தமையையும் அதை மக்கள் போற்றினமையையும் மதுரைக் காஞ்சி வழி அறியலாம்.

பசும்பூண் பாண்டியன் எனும் அப்பாண்டிய மன்னனின் பெயரே அவன் ஒரு ஆசிவகன் என்பதினை எளிதில் விளக்கும் எனில் ஆசிவர்களின் சமயவியலில் நிறக் கோட்பாடு மிகவும் இன்றியமையாததாகும். அவர்கள் நிறக்கோட்பாட்டின் அடிப்படையில் மனிதர்களைப் பிரிப்பார்கள். அப்பிரிவுகளாவன, கரும்பிறப்பு,

கருநீலப்பிறப்பு, பசும்பிறப்பு, பொன்பிறப்பு வெண்பிறப்பு கழிவெண்பிறப்பு என்பனவாகும். இவற்றில் வெண்பிறப்பு துறவிகளுக்குரியது அவர்கள் கழிவெண்பிறப்பு நிலையினையடையும்போது வீடுபேறடைவர். பசும் பிறப்பு இல்லறத்தார்களுக்கு உரியது. அதன் அடிப்படையிலேயே இல்லரத்தானாகிய பூண்பாண்டியனை பசும்பிறப்பைப் பூண்பாண்டியன் எனும் ஆசிவக நிறவியல் கோட்பாட்டைக் கொண்டனன் எனக் கொள்ளவுமிடமுண்டு. மேலும் இம்மன்னனைக் குறித்துப் பாடிய புலவர்களைப் பற்றி ஆய்கின்றபோது, ஈழத்துப் பூதன் தேவனார், மதுரைக் கணக்காயனார், பரணர் முதலிய புலவர்கள் இவனைப் பெரிதும் போற்றியுள்ளனர். மேற்கண்டவர்களில் மதுரைக் கணக்காயனார் ஆசீவகசமயத்தவர் என எண்ண இடமுண்டு. ஏனெனில் அந்நாளில் கணிதத்திலும், வானியத்திலும் கணாத்திறமுறைத்தலிலும் ஆசீவர்களே பெரிதும் சிறந்து விளங்கினர். இக்கருத்தினை க. சுப்பிரமணியனும், க. நெடுஞ்செழியனும் ஒப்புவர். ஆசீவகர்களின் அடிப்படைக் கொள்கை அனுவியம் எனும் நாற்பூதக் கொள்கை இவ்வடிப்படையில் ஈழத்துப் பூதத்தேவனார் ஈழ மண்டலத்தைச் சேர்ந்த ஆசீவகத்தைப் பின்பற்றும் தமிழ்ப் புலவராக இருக்கலாம். மேலும் பரணர் பசும்பூண்பாண்டியனைப் பற்றிப் பாடிய

"கொளக்குறை படாக் கோடுவளர் குட்டத்து
அளப்பு அரிது ஆகிய குவை இரும் தோன்றல,
கடல்கண் டன்ன மாக விசும்பின்
அழற்கொடி அன்ன மின்னுவசிபு நுடங்க
கடிது இடிஉருமொடுகதழ்உறை சிதறி
விளிவுஇடன் அறியா வான் உமிழ் நடுநாள்
அருங்கடிக் காவலர் இகழ்பதம் நோக்கி
பனிமயங்கு அசைவளி அலைப்ப, தந்தை
நெடுநகர் ஒருசிறை நின்றனென் ஆக
அறல் என அவிர்வரும் கூந்தல் மலர் என
வான்முகத்து அலமரும் மாஇதழ் மழைக்கண்
முகைநிரைத் தன்ன மாவீழ் வெண்பல்
நகைமாண்டு இலங்கும் நலம்கெழு துவர்வாய்
கோல்அமை விழுத்தொடி விளங்க வீசி,
கால்உறு தளிரின் நடுங்கி ஆனாது
நோய்அசா வீடமுயங்கினள் - வாய்மொழி
நல்இசை தருஉம் இரவலர்க்குஉள்ளிய
நசைபிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்

கோள்அறவு அறியாப் பயம்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்
களிறு அணி வெல்கொடி கடுப்ப, காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்துதோன்று அருவி
நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
சூரர மகளிரின் பெறற்குஅரி யோளே" –அகம் 162.

என்னும் பாடல் முற்றிலுமாக ஆசீவத்தின் தற்செயலியம் எனும் இயல்புக் கோட்பாட்டை விளக்குவதாக அமைந்துள்ளது. மேலும் பரணர் வைதீக எதிர்ப்புடன், ஈகை மறுமையின் நலனை எதிர்பார்த்துச் செய்வதல்ல இம்மையில் வறுமை நீக்கவே என

"மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண்மையே"
–(புறம்–41 14–15)

கூறுதலால் அறியலாம் இதன்வழி பரணர் ஆசீவகக் கோட்பாட்டினைக் கொண்டிருந்தமை விளங்கும்.

மேற்கண்ட சான்றுகளின் வழி ஆசிவகசமயம் பாண்டிநாட்டில் செழித்திருந்தமையையும் பசும் பூண்பாண்டியன் ஆசிவகசமயத்தைச் சார்ந்திருந்தமையையும் அறியலாம்.

கொங்குதகடூரை யாண்ட சிற்றரசன் அதிகன் நெடுமிடல் அஞ்சி என்பவன் பசும்பூண் பாண்டியனின் படைத் தலைவனாக இருந்தான் என்பதினை (குறு–393)

"மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நான்றவச் சிலவே யலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல்அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே"
(குறுந்தொகை–393)

எனும் பாடல் அடிகளால் அறியலாம். இந்நெடுமிடல் அஞ்சி பாண்டியனின் படைத்தலைவனாய் இருந்து கொங்கப் புலப்போரில் களம் பட்டு இறந்தான் என்பதினை

"யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கன்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லிமிழ் அன்ன"

(அகம் 260-10-15)

எனும் அடிகளால் அறியலாம். பசும்பூண்பாண்டியன் ஆசீவகச் சமயத்தைக் கடைபிடித்திருக்க வாய்ப்புள்ளது. நெடுமிடலுக்குப்பின் பசும்பூண் பாண்டியன் கொங்கு நாட்டினைக் கைப்பற்றினான் என்பதனை பின்வரும் அடிகளால் அறியலாம்.

"வாடாப் பூவிற் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி கூடல் நெடுநகர் ஆடிய
இன்னிசை யார்ப்பு" (அகம் 253 4-7)

இப் பாடலடிகளின் வழி இருவேறு கருத்துக்களை நாம் விளங்கிக் கொள்ள இயலுகிறது. முதலாவது இப்பாடலின் இறுதியடிகளின் வழி பசும்பூண் பாண்டியன் இசை, நாட்டியம் முதலானவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதினை அறியலாம். ஆசீவகத் தோற்றுனர்களில் ஒருவரான மற்கவடி ஒரு பாணர் என்பதும் மேலும் பல பாணர்களும் விறலியர்களும் ஆசீவகத்தில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாக க. நெடுஞ்செழியன் கூறுவர். சமணசமயம் இசை நாட்டியம் முதலிய கலைகளை வெறுத்து ஒதுக்கியது. ஆனால் இக்கலைகளை ஆசீவக சமயம் பெரிதும் போற்றி வளர்த்தது. சித்தன்னவாசல் ஆடல், பாடல் மங்கையரின் ஓவியத்தின் வழியும் அரச்சலூர் கல்வெட்டின் வழியும் இதனை நாம் உணரலாம்.

மேலும் சமணசமயம் கொங்கின் வடக்கே மீகொங்கில் உள்ள எருமையூரில் வலுப்பெற்றுச் சமணத்துறவிகள் கொங்கின் பவானியாற்றின் துணையாறான மேயாற்றுக் கணவாயையும் காவேரிபுரக் கணவாயையும் கடந்து தமிழகத்தினுள் பெருவாரியாக நுழைந்தனர். இவர்களின் நுழைவிற்கு முன்பே திருச்செங்கோடு அரச்சலூர் முதலிய கொங்கு நாட்டுக் குன்றுகளிலும் பாண்டிநாட்டுக் குன்றுகளிலும் ஆசீவகர்கள் பெரிதும் தங்கி இருந்தனர். அவர்களுடன் கொங்கில் நுழைந்த சமணர் மோதல் போக்கைக் கைக் கொண்டனர்.

சங்ககாலப் பாண்டியரின் ஆட்சிக்குப்பின் ஆசீவகம் சரிந்து சமணம் மேலோங்கத் தொடங்கியது. பாண்டிநாட்டில் சமண ஆசீவக மோதல் உச்ச நிலையை அடைந்தமையை மதுரைக்கு அருகில் உள்ள கீழக்குயில் குடியிலுள்ள நாகமலைக் குகையில் அறியலாம். நாகமலையடிவாரத்தில் உள்ள கீழக்குயில் குடியில் மலையடிவாரத்தில் அழகிய தாமரைக் குளமும் அதனையடுத்து ஓர் ஐயனார் கோவிலும் மலைமேல் சமணர்கள் சிலைகளுடன் கூடிய சுனையும் உண்டு. அவ் ஐயனார் கோவிலில் கல்லில் செதுக்கி வெள்ளை நிறம் பூசிய யானை சிற்பம் முதலிய பல ஆசீவகக் கூறுகளைக் காணலாம். ஐயனார் கோவிலைச் சுற்றி சிறிது சென்றால் இயற்கையாக ஒரு குகை காணப்படுகிறது. அதன் நுழைவாயிலின் மேல் முக்குடையுடன் கூடிய சமண தீர்த்தங்கரர் சிலையும் குகை உட்புற மேல்த்தளத்தில் புகைக் கூண்டு போன்ற வட்ட அமைப்பில் பல சமண தீர்த்தங்காரர்கள் வடிவங்களும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில்ஒரு காட்சி ஆசீவக சமண மோதல் பாண்டிநாட்டில் உச்சம் அடைந்தமையை விளக்குவதாக அமைந்துள்ளது.

தமிழர்களின் தாய் தெய்வவழிபாட்டை இயக்கி (யட்சினி) வழிபாடாக உள்வாங்கிக் கொண்ட சமணத்தின் வழிப்பட்ட இயக்கி ஒருத்தி சிங்கத்தின் மேல் அமர்ந்து, யானையின் மீது அமர்ந்துள்ள ஆசீவகன் ஒருவனுடன் மோதுவதாக அச்சிற்பக்காட்சி அமைந்துள்ளது. இச்சிற்பம் பசும்பூண் பாண்டியன் காலத்திற்கு ஐந்தாறு நூற்றாண்டுகள் பிற்பட்டதாகும். இதன் வழி பசும்பூண் பாண்டியன் காலத்திற்காணப்பட்ட ஆசீவக எழுச்சி வளர்ச்சி சமணத்தாக்குதல்களால் மிகவும் வலுவிழந்த நிலையை அடைந்து தேயலுற்றதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பசும் பூண்பாண்டியனின் பெயராலும் அவனைப் பாடிய புலவர் பெயராலும் பாடலின் கோட்பாடுகளாலும் யானைச் சின்னக் கொடி மற்றும் காசுகளின் வெளிப்பாடுகளாலும் காசிலுள்ள கடம்பமரம் (வேம்பே பாண்டியர்களுக்குரியது. கடம்ப வனமழித்தே அங்கயற்கண்ணி கோவில் அமைந்ததாக தலவரலாறு கூறும்) நிறைகுடம், சக்கரம் முதலாய பல ஆசிவரசின்னங்களாலும் இவ் யானைச் சின்னம் பசும் பூண்பாண்டியரின் சமயச் சின்னமே என்பதினை அறியலாம்.

பாற்கர சேதுபதி
நான்மணி மாலை (சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆசிரியர்
யாழ்பாணம், நல்லூர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்,
உரைவிளக்கம் இரா. சதாசிவம்
செந்தமிழ் ஆசிரியர்.

அகவல் பாடல் 16

தெளிதரு மன்பினர் சிந்தையிற் சேக்கு
மளிதரு கமல வடிச்சிவ பெருமா
னாருயிர் மலமகன் றருங்கதி யடைவான்
சீரணி பவளத் திருவாய் மலர்ந்த
வரிறபு சத்திய வாகமக் கடலிற்
பரிவுற மூழ்கிடும் படுதர சிகாமணி
மெய்யடி யார்புகழ் விழைவுட னாய்ந்து
செய்யமே னிலைகிளர் சிரத்தைப் பத்தியா
னாரியஞ் செந்தமி ழாங்கிள நூல்பல
கூரிய மதியினிற் குறைவறக் கற்றோன்
றளவாய் மகிபதி தவத்துதித் தவனிமுற்
றளவா விண்ணமு மளந்த புகழ்நிறீஇ
யொருதுறைக் கோவைக் கும்பர்கோன் காவைப்
பொருதுணைக் கரத்தாற் பொன்மழை பெய்த
கோது பதியாக் குலரகு நாத
சேது பதியாஞ் சீமான் மருமான்
றிவ்விய வாலையந் திகழு மடாலையஞ்
செவ்விதி னோம்பிடுந் திருத்தகு கருத்தான்
றிகழ்துரை ராசாச் சிறப்புப் பெயர்பலர்
புகழ்தரச் செங்கோல் பொறப வேந்தி
மூதறி வெய்திய முத்துரா மலிங்க
சேது பதியுஞ் செழுமனைக் கிழத்தியா
யாவவெய்த் தனமெனு மநாதருக் கென்று

மாவலி னுணவுடை யாதிய வருளிச்
செந்தமிழ்க் கலைபல திரிபறக் கற்றுச்
சந்தத மாகமத் தடங்கடன் மூழ்கி
யவமுழு தொருவிய வருந்தவர் பரவத்
தவமுழு துஞற்றிய தவமா யோங்கி
வாரொலி கருங்குரன் மடமின் னார்க்கு
வேரியம் புயத்தினன் விதித்தகட் டளையாய்க்
கூர்ந்திடு வேல்விழிக் கோதையர் கழுத்திற்
சேர்ந்துமங் கலமாந் திருமுகத் திருவாய்
வம்பலர் மலர்ப்பொழில் வளர்புலி யூர்ப்பொன்
னம்பல வொளியோ டயிக்கிய முற்ற
மணிவா சகப்பெரு மான்றிரு வடியி
லணிவான் மலர்கடு யருச்சனை நிரப்பித்
திருந்துகர்ப் பூர தீபங் காட்டி
யருந்திரு வாசக வருளமு தோடளா
யொருதிருக் கோவையா ரோங்குதே வாரமாய்
வருசுவைத் தெய்வ மதுவினை மாந்திச்
சைவமே சமயந் தகும்பர சிவனே
தெய்வமென் றெவர்க்குந் திடமதி கொளுத்திப்
புற்புத மிளமைநீர்ப் பொறியது வாழ்க்கை
பொற்புறு செல்வநீர்ப் பொருதிரை யெனத்தெரீஇ
வளந்திக ழுலக மாதா வாகி
யுளந்திகழ் தெளியோ டுறைந்தமுத் தம்மையு
மயன்றலை கொய்தவ னடிதொழீஇ யுஞற்றிய
வியன்றவ மெலாமொரு மெய்யெடுத் தனையான்
றன்னிகர் பாற்கர சாமி
மண்ணுயிர்க் குயிராய் வாழ்வுற் றனனே. (16)

அருள்நலம்

தெளிந்த மெய்ஞ்ஞானமுடையவர்களின் நெஞ்சில் நிறைந்திருப்பது அன்பு; தெளிந்த மெய்யறிவும் அதன் பயனாகிய அன்புமுடையவர்கள் சிந்தை விரும்புவது இறைவனுடைய குறைவற்ற

திருவருளேயாகும். தெளிந்த மெய்யுணர்வுடைய அன்பினர் சிவபெருமானுடைய திருவடியாகிய அருளைச் சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் சேர்க்கின்றனர். தாமரை மலரின் மதுவும் மணமும் துய்த்து இன்புறும் வண்டுகள் பண்ணிசைப்பது போல அடியார்கள் சிவனது திருவருள் அமுதைப் பருகி அழியா இன்பத்துள் திளைக்கின்றார்கள்.

அருள் ஒளி நிறைந்த அடியவர் உயிரைப் பீடித்துள்ள இருள்மலம் அகன்று பெறற்கரும் பேறு பெற்று உய்வர். மலநீக்கத்துக்குக் காரணமாகிய குற்றமற்ற உண்மை பொதிந்துள்ள ஆகமப் பொருளைச் சிவபெருமானே உயிர்கள் உய்யும் பொருட்டுப் படைத்துள்ளான். அவன் அருளிச் செய்த ஆகமங்களை தக்கசான்றோர்களுடனிருந்து ஆய்ந்து பொருள் தெளிவதில் மெய்ஞ்ஞான நாட்டமுடையவர் பாற்கரசேதுபதி. சேதுபதியின் மெய்ப்பொருள் ஈடுபாட்டை ஆசிரியர்,

"அரில்தபு சத்திய ஆகமக் கடலில்
பரிவுற மூழ்கிடும் படுதரசிகாமணி"

எனச் சாற்றுகிறார்.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"

எனத் திருவள்ளுவர் அறிவுறுத்துவார்.

மெய்யடியார் புகழை விரும்பிக் கற்கும் வண்ணம் நூல்கள் எழுதப்படுதல் வேண்டும் என்னும் குறிப்புடையவர் திருவள்ளுவர். அரசர் பாற்கர சேதுபதி மெய்ப்பொருள் உணர்ந்த சான்றோர் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளில் மிக்க ஈடுபாடுடையவர். இவருக்குப் பெரியபுராணம் போன்ற நூல்களில் இடைவிடாத பயிற்சி இருந்ததால் மெய்யன்பும் பக்தியும் திருவருள் நாட்டமும் உண்டாகி, காமம், பொருள் ஆசை ஆகிய குற்றங்கள் நீங்கி வாழ்வு இன்பம் நிறைந்ததாக அருள் நலம் பெற்றது. பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளும் நீங்கியது. போகமும் பொருள் ஒன்று

அறியாத கூழை மாந்தர் தம் செல்கதிப் பக்கம் மனம் ஒன்றாத தகைமையும் சிறந்தது. மெய்யடியார் புகழ் மொழி கேட்பது இவர் உயிர்க்கு ஊதியம் ஆயிற்று. உயர் பிறப்பாளராகிய பாற்கர சேதுபதி கல்வி அறிவு ஒழுக்கம் நிரம்பியவர். அவர் இயல்பாகவே அறிவார்ந்த மெய்ப்பொருள் நாட்டமும் அஃதுடைய பெரியவர் வரலாற்றையும், வாழ்வையும் போற்றும் இயல்பினர் என்பதைச் சிவசம்புப் புலவர் கற்பவர் மனம் கொள்ள எடுத்துரைத்திருப்பது அறிதற்குரியதாகும்.

பாற்கர சேதுபதி இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் உணர்ந்ததுபோல தமிழோடு ஆங்கிலம், வடமொழிக் கல்வியும் சிறந்து விளங்கினார். பரதகண்டத்தின் பல்வேறு தேசங்களிலிருந்து வரும் மெய்யுணர்வாளர்கள் போற்றும் கல்வி நலம் வாய்க்கப்பெற்றவர். இவருடன் கலந்துரையாடுதற்காகவே பலநாள் இவர்தம் அரண்மனையில் தங்கிக் கல்வி இன்பம் துய்ப்பர்; இவர் திருவும் தெள்ளிய நூல் பயிற்சியுமுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரகுநாத சேதுபதி இவருடைய முன்னோர்; ஒருதுறைக் கோவை என்னும் நூலை இவருடைய அவையில் அமுதகவிராயர் அரங்கேற்றினார். அக்கவிஞர் பிரானுக்கு இரகுநாத சேதுபதி பொன்னங்கால் (உம்பர்கோன்கா) என்னும் வளம்மிக்க ஊரையும் அவர்பாடிய ஒவ்வொரு பாடலுக்கும் பொன்னால் செய்த எலுமிச்சம்பழத்தையும் (நானூறு பாடலுக்கும் நானூறு பொன்னால் செய்த பழத்தைப்) பரிசாக வழங்கினார். அவர் வழிவந்தவர்கள் இன்றும் வளமாக வாழ்வதாக உ.வே.சா தம் வரலாற்றில் குறிப்பிடுகிறார்.

ஈவார் மேல் நிற்பது புகழ் என்பதை உணர்த்த ஆசிரியர் சிவசம்புப் புலவர்,

"..........................புகழ்நிறீஇ
ஒருதுறைக் கோவைக்கு உம்பர்கோன் காவைப்
பொருதுணைக் கரத்தால் பொன்மழை பெய்த

கோது பதியாக் குலரகு நாத
சேது பதியாஞ் சீமான் மருமான்", எனப் போற்றுகின்றார்.

முத்துராமலிங்க சேதுபதியின் இல்வாழ்க்கைத் தவம்:

ஆசிரியர் முத்துராமலிங்க சேதுபதியை "திருத்தகு கருத்தான்" எனப் போற்றுவது கருதத்தக்கது. திரு என்னும் சொல் செல்வம், அருள், அழகு என்னும் சிறப்புடைய பொருளைக் குறிக்கும். இவையனைத்தின் உருவகம் ஆகும். இவர் அருள் வழங்கும் ஆலயங்களையும் புகழ்மிக்க மடங்களையும் சிறப்புறப் பாதுகாக்க வேண்டும் என்னும் கொள்கை உடையவர். அக்காலத்தில் உருது, ஆங்கிலம் ஆகியவற்றின் செல்வாக்கினால் துரை, ராசா என்னும் சொற்கள் அரசரைக் குறிக்க வழங்கின. இவ்வரசர் பெருமானையும் மக்கள் "*துரை ராசா*" எனச் சிறப்புற அழைத்தனர் என்பதை ஆசிரியர் கூற்றால் அறிகிறோம். இவ்வரசர் பெருமகனார் புகழ் தரச் செங்கோல் நடத்தினார் என ஆசிரியர் புகழ்வது அரசருடைய ஆட்சிச் சிறப்பை உணர்த்துகிறது.

பாற்கரசேதுபதியின் தந்தையாகிய முத்துராமலிங்க சேதுபதி இளமையிலேயே பேரறிவாளராக விளங்கியவர். முத்துராமலிங்க சேதுபதியின் வாழ்க்கைத் துணைவியார் முத்தம்மையார் தம் கணவருடைய பெரும் பெயருக்குக் குறைவு நேராமல் இல்லற மாண்புகளைப் போற்றி ஒழுகும் திருமகளை ஒத்த சீர்மையுடையவர்.

இல்லறம் சிறக்க வாழ்ந்த இவர்கள் "இளைத்தோம், எளியோம்" எனவரும் ஆதரவற்றவர்களுக்கெல்லாம் பரிவுடன் உணவு உடை முதலானவற்றை அளித்துப் பாதுகாத்தனர்.

செந்தமிழ் இலக்கியக்கலை தேர்ந்த புலவர் முத்துராமலிங்க சேதுபதி; தாமே செய்யுளியற்றும் மாண்புடையவர்; செவ்வியல் இலக்கியப் பயிற்சி சேதுபதி அரசவையில் நாளும் நடைபெறும். தொன்றுதொட்டுப் புலவர்களுடன் கூடிப் புலவர் கூட்டுண்ணும் ஒழுகலாறு சேதுபதி அரச குடும்பப் பண்பாகும்.

செந்தமிழ்க் கலை பல குற்றமறக் கற்று நூல் நயம் தேர்ந்த சான்றோன் என முத்துராமலிங்க சேதுபதியை குறிப்பிடுவது பண்டைக் காலத்தில் தமிழ்க் கல்வி அரசவையில் போற்றப்பட்ட உண்மை கூறியவாராம். அதனுடன் சைவ ஆகமங்கள், சித்தாந்த

சாத்திரங்கள் தேர்ந்த செய்தியையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். *சேதுபதி அரசவை ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம்போல விளங்கிற்று* என்பதை,

> "செந்தமிழ்க் கலைபல திரிபறக் கற்றுச்
> சந்ததம் ஆகமத் தடங்கடல் மூழ்கி" எனக் குறிப்பிடுகிறார்.

திருக்கோவையார் இயற்றிய மணிவாசகர் மாண்புரைத்தல்

சிவசம்புப் புலவர் மணிவாசகருடைய திருக்கோவையார், திருவாசகம் இரண்டிலும் உள்ளம் தோய்ந்த மெய்யுணர்வாளர். மணிவாசகரைக் குறிப்பிடும் இடங்களில் மாசு நீங்கிய முனிவர்கள் எல்லாம் போற்றி வழிபடும் ஞானியார் என்றும் தவமே மணிவாசகரைப் பெறத் தவம் செய்தது என்னும் பெற்றியர் என்றும் குறிப்பிடுகிறார். அத்தகு தெய்வமாமுனிவர் வம்பலர் மலர்ப்பொழில் வளர் புலியூர் பொன்னம்பல வெளியில் இறைவனுடன் கலத்தற்கு விரும்பித் தன்னைத் தலைவியாகவும் சிறைவான் புனற் றில்லைக் கூத்தனைத் தலைவனாகவும் அமைத்து மங்கலமாந் திருமுகத் திருவாய் மலர்ந்து திருக்கோவையாரையும் திருவாசகத்தையும் பாடினார். அதனைப் பாடி அர்ச்சனை செய்வது சேதுபதி குடும்பப் பூசை மரபு. அதனை நன்குணர்ந்த முத்துராமலிங்க சேதுபதிமிக்க அன்புடன் திருவாசகம் தேவாரம் பாக்களைப் பாடி மகிழ்வார். இதனை ஆசிரியர்,

> "அருந்திருவாசகம் அருள் அமுதோடளாய்
> ஒரு திருக் கோவையார் ஓங்கு தேவாரமாய்
> வருசுவைத் தெய்வ மதுவினை மாந்தி"

எனக் குறிப்பிடுகிறார்.

ஈண்டு ஆசிரியர் திருவாசகத்தை **"அருள் அமுது"** என்றும் திருக்கோவையார், தேவாரம் ஆகியவற்றை **"வருசுவைத் தெய்வ மது"** என்றும் குறிப்பிடுவது அந்நூல்களின் மாண்புரைத்ததாகும். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து கற்பார் மருள் நீங்கி அருள் பெறுவர். ஆகையினால் திருவாசகத்தை அருள் அமுது என்றும்,

திருக்கோவையாரும் தேவாரமும் திருவருள் பேற்றோடு இலக்கிய இன்பமும் உயிர்க்கு உரமும் வழங்குவதால் "வருசுவைத் தெய்வ மது" என்றும் ஆசிரியர் போற்றுகின்றார். முன்னோர் நூல்களின் பொருள் நலமும் இலக்கியச் சுவையும் உணர்ந்து போற்றிக் கற்க வேண்டும் என வலியுறுத்தியதாகும். இவர் மரபுளோர் சைவநீதி உலகெலாம் பரவப் பல்லாற்றானும் பாடுகிடந்தவர் என்பது தேற்றம்.

அறுவகைச் சமயத்தோர்க்கும் மெய்ப்பொருள் காட்டுவது சைவமாகையால் சைவமே சமயம் என்றார். யார் யார் எப்பெயர் சொல்லி வழிபட்டாலும் அவரவர் தெய்வந்தோறும் கலந்து நின்று அருள் பாலிப்பவன் பரசிவனே யாகையால் அவனே தெய்வம் என்றும் எடுத்துரைக்கின்றார்.

வாழ்க்கை என்பது அகம் புறம் என்ற இரு கூறுகளை உடையது. அகம் களவுகற்பு என்னும் இருவேறு பாகுபாடுகளை உடையதாகும். களவு என்பது தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் தெய்வத்தான் கூட்டுவிக்கக் கண்டு காதலுறுவதாகும். அக்காதல் திருமணமாக மலர்ந்து இல்வாழ்க்கை என்னும் தவவாழ்க்கை தொடங்குகிறது. அதுவே முதிர்ந்து திருவருளால் நிலையாமை உணர்ந்து பற்று நீங்கி மெய்ப்பொருள் கண்டு அவா அறுத்துத் திருவருளுக்குத் தகுதியாகிறது.

இல்வாழ்வான் நிலையாமை உணர்வுடையவனாகி இளமையும் உடல் இன்பமும் நீரில் தோன்றும் குமிழி போன்றது என்ற உணர்வோடு வாழ்தல் வேண்டும். பொருள் கடல் அலைபோல வந்துபோவது; எனது என்னும் செல்வ நசை எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்று அன்று என்பதை உணர்ந்து அதன்கண் உள்ள பற்றை நீக்கி அன்பும் அருளும் நிறைந்த இனிய வாழ்க்கை வாழக் கற்றுக் கொள்ளவேண்டும் என்பது நூலோர் துணிபு. இதனை நன்கு உணர்ந்த முத்துராமலிங்க சேதுபதியும் அவருடைய அன்புத் துணைவியார் முத்தம்மையும் தாங்கள் பெற்றிருக்கின்ற அரசச் செல்வத்திற்குத் தம் பாதுகாவலராக இருந்து உலக நன்மைக்கு அவற்றைப் பயன்படுத்தும் கடப்பாட்டாளராகத் தம்மைக் கருதினர். அதனை ஆசிரியர்,

"புற்புதம் இளமை நீர்ப் பொறியது வாழ்க்கை
பொற்புறு செல்வ நீர்ப் பொருதிரை யெனத்தெரீஇ
வளந்திகழ் உலக மாதா வாகி
உளந்திகழ் தெளியோடு உறைந்த" எனப்

பாற்கர சேதுபதியின் பெற்றோருடைய கல்வி கேள்வி ஒழுக்கங்களால் ஆகிய உள்ளத் தெளிவை மாண்புற விளக்குகின்றார்.

சதாசிவ மூர்த்தமாகிய இறைவன் ஐந்து தலைகளையுடையவன்; பிரம்மாவும் தனக்கு ஐந்து தலை என்று கர்வம் கொண்டான்; கர்வபங்கம் செய்ய இறைவன் அவனுடைய ஒருதலையை தம் நகத்தால் கிள்ளியதாகப் புராணங்கள் கூறும்; அதனை நன்குணர்ந்த சேதுபதிகளும் தம் வாழ்க்கையில் ஆணவமலம் இன்றி அரசச் செல்வத்தை அருள் நெறியில் பயன்படுத்தி அடக்கம் நிறைந்த தவவாழ்க்கை நடத்தினர். அத்தகைய வியத்தற்குரிய தவமே வடிவமாய் பாற்கரசாமியின் அரும்பிறப்பு செந்தமிழும் சைவமும் செய்த நற்றவமாய் விளங்கிற்று.

வெண்பா

"உற்றார் பிதிர ருறுவர்பசு வொண்டொடியார்
கற்றார் சிசுக்கள் கடவுணிதி-யற்றாரைப்
பற்றாரக் காக்குநெறிப் பாலொழியாப் பாற்கரனை
மற்றா ருலகினிகர் வார்" [17]

இறைமாட்சி புண்ணியத்தின்பாலது; அரசனாகப் பிறந்து நாடாளுவது சிறப்பாயினும் தண்ணளி (அருள்நெறி) இன்றி மக்களைப் பேணாத அரசன் ஆட்சி செய்வதால் அவனுக்கு ஒரு பயனுமில்லை, துன்பமே எனக் குமர குருபரர் அறிவுறுத்துகிறார்.

பாற்கரசேதுபதி அரசியல் அதிகாரம் மக்களைப் பாதுகாக்கும் அருள் ஆணையாக விளங்கிற்று. அதனை ஆசிரியர் நுண்ணிதின் விளக்குகின்றார்.

வரிசை அறிந்து போற்றுதல் அரசற்குக் கடமையாகும். பாற்கர சேதுபதி தம் உறவினர், பிதிரர் இவர்களை வரிசை யறிந்து

பாராட்டி வந்தார். தம்மையடைந்த எளியவர்கள், பெண்கள், கல்வி, அறிவு ஒழுக்கம் உடையவர்கள், குழந்தைகள், வறுமையுற்றவர்கள் ஆகிய அனைவரையும் முறையறிந்து உரிமையால் காக்கும் பாற்கரனை ஒத்தவர் பாற்கரனே எனப் போற்றுகின்றார்.

திருக்குறள் முதலான நூல்கள் பசுக்களைப் பாதுகாக்கும் அரசநீதியை வலியுறுத்துகிறது. அரசன் நீதி தவறினால் ஆபயன் குன்றும் என அரசியலார் மேல் குற்றம் சாட்டுகிறார். அரசநீதி பசுக்களைப் பேணுதலுமாகும்.

கோயில்கள் மக்களின் சமுதாயப் பண்பாட்டு, நாகரிகக் கலை மையங்களாகும்; இசை, இயல், நாடகம், ஓவியம், சிற்பம், நாட்டியம் முதலான கலைகள் மக்களின் உயிர்த் தேடலுக்கு வாழ்வு கொடுப்பதாகும். மானிட வாழ்வைத் தெய்வமானிட வாழ்வாக அழகுநலமும், கலைநயமும் பெறச் செய்வது தமிழர் கோயில்களாகும். தமிழரசர்கள் வழிவழியாகக் கோயில்களைப் பாதுகாத்து வந்தனர். அத்தகைய மாண்பு பாற்கரசேதுபதிக்கும் வரலாற்றில் உண்டு. அதனைச் சிவசம்புப் புலவர் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

கலித்துறை

"வார்வந்த பைங்கழற் றென்னன்முன்
னானவர் மாண்டனரந்
நேர்வந்த செல்வரு மன்னார்பன்
னாளிந் நெடுந்தமிழை
யார்வந் தகக்கற்றலுத்தேமென்
பார்குறை யற்றவன்றோ
கார்வந்த கைத்தலப் பாற்கரன்
வந்தனன் காண்மின்களே" (18)

இப்பாடலில் புலவர் தமிழ் முயற்சி பழுதுபடாமல் பாற்கரவேள் காத்த காலத்தின் கட்டாயத்தை எடுத்துரைக்கிறார்.

பாண்டிய மன்னர்கள் பண்டைக் காலத்தில் சங்கம் வைத்து மொழி வளர்த்துத் தமிழ்ப் புலவர்களை மாண்புடன் போற்றினார்கள். பிற

அரசர்களும் செல்வர்களும் புலவர்களைப் போற்றிய காலம் உண்டு. அதனால் புலவர்கள் தங்கள் கல்வி வித்தகம் உலகறியும் வண்ணம் கற்று மேம்பட்டனர். ஆனால் இப்போது புலவர்களைப் பேணுவாரில்லை; நீண்டகாலம் ஆசிரியரிடமிருந்து இலக்கண இலக்கியங்களைப் பயிற்சி செய்துகலை மேம்பட்டுப் புலவராகும் ஆர்வம் இயற்கையாகவே குறைந்து போனதொன்றும் வியப்பில்லை. புலவர்களும் கல்வி ஆர்வம் குறைந்து அலுத்துப் போனார்கள். ஆனால் அவர்களுடைய குறை நீங்கும் படிக்குப் பாற்கர சேதுபதி தோன்றியது கார் காலத்து மேகம் மழை பெய்வதுபோல ஆயிற்று. அவனுடைய செந்தமிழ் ஆர்வம் புலவர் வாழ்வைச் செழிக்கச் செய்தது. கார்காலத்து மழை நிலத்தைப் பச்சையாக்கியது போல புலவர் வாழ்வைப் பசுமையாக்கியது.

மழை இல்லாவிட்டால் நாட்டில் பசுமை இன்றி வறுமை உண்டாகும்; பாற்கர சேதுபதி அரசியல் நடத்தாதிருந்தால் தமிழகத்தில் செந்தமிழ் வறுமையுற்றுச் சிதைந்திருக்கும்; கல்வி கேள்விமிக்க புலவர்களும் இல்லாது போயிருப்பர் எனக் கவிஞர் கூறுவது சிந்தனைக்குரிய செய்தியாகும். அரசியலார் கல்வி கேள்வி வல்ல தமிழ் முயற்சிகளை அறிந்து பாராட்டவும் அவற்றுக்கு உறுதுணையாக இருந்து பாதுகாக்கவும் கடப்பாடுடையவர் ஆவார்.

விருத்தம்

"காண்டகு தனது திருப்புகழ் பாடுங்
கவிஞருக் குதவவிக் கலிதான்
மாண்டகு செவ்வித் தன்றெனா நீல
மயிலிவர் சிவனருண் மதலை
தூண்டகு துணைத் தோட் பாற்கர சாமித்
துரைமகன் வாயிலாய் மறைவுற்
றேண்டகு நிதியந் தரத்திருவுள்ள
மியைந்தன னென்னவெண் ணினமே". (19)

முருகவேள் தம் குறைமுடிக்கப் பாற்கரவேளாக உருக் கொண்டனன் எனப் புலவர் குறிப்பிடுவது பாற்கரவேளின் மாட்சி உணர்த்தியதாகும். முருகக் கடவுளும் சிவனும் செந்தமிழ் நலம்

துய்க்கப் பற்பல சமயங்களில் புலவர் குறைமுடித்து அவர்க்கு ஏவல் செய்தனன் என்பதை தமிழர் வாழ்வியல் இலக்கியங்கள் விரித்துரைத்துள்ளன.

முருகக் கடவுள் திருப்புகழ் விருப்புடையவன்; தமிழ் நலம் துய்க்கும் ஆர்வமுடையவன். கலிகாலத்தில் முருகக்கடவுள் நேர்பட வந்து புலவர்களை ஆதரித்தான் என்பது காலத்திற்கு ஒவ்வாத செய்தியாகக் கருதப்படும்; ஆனால் முருகக் கடவுள் பாற்கர சேதுபதியாக சேதுநாடு புரந்து புலவர்களை ஆதரிக்கின்றான் எனப் புலவர் பலரும் தம் நுண்ணறிவினால் நுண்ணிதின் உணர்ந்தனர்.

பாற்கர வேள், கல்வி கேள்வி ஒழுக்கங்களால், முருகக் கடவுள் என நினைக்கத் தோன்றும் மாட்சிமை உடையவன். புலவர்களுடைய கல்வி நலம் துய்த்து அவர்களைப் போற்றுதலினால் தமிழ்க் கடவுளாகிய முருகனாகவே காட்சியளிக்கின்றான். சங்கம் இருந்த முருகவேள் போல இவனும் இயலிசை நாடகம் வல்ல புலவனும் அரசனுமாக இருந்து நான்காம் தமிழ்ச் சங்கத்தை நடத்தியவன் என்னும் ஒப்புமையால் பாற்கரவேளும் தமிழ் முருகனே எனப் போற்றுதற்குரியன்.

அகவல்

"எண்ணிய வெலாமரு ளிறையவ னடியுறூஉம்
புண்ணிய சிந்தனை புயக்க லாற்றா
தன்புரு வாகி யாஎசவேர் பறித்த
துன்பிலா வாத்தருந் துலங்கிடுஞ் சங்கஞ்
சேதுவிற் றிவ்விய தீர்த்தந் திளைத்துள
வாதுகள் கழீஇய வயவர்வாழ் சங்கஞ்
சுத்தசித் தாந்தநூற் றுணிபொருங் குணர்ந்து
சித்த மமைந்தவர் திகழ்ந்திடுஞ் சங்கந்
தீர்த்தயாத் திரைக்குச் செம்பொருள் பெறுவா
னார்த்தியி னணைந்திடு மன்பர் வாழ் சங்க
மூதகு சொற்றொடை முதமுறத் தொடுக்கு
மேதகு பெரும்புகழ் விபுதர்வாழ் சங்க

மக்கத மலர்சொரிந் தாசிசொற் றென்றுந்
தக்கவந் தணர்பலர் சார்ந்திடுஞ் சங்கம்
வாய்ந்திடு மமைவுடை மந்தண நெறிக்கே
காந்த ராமமாய்க் காண்டகு சங்க
நாகரோ டமரர்கோ னரவடி வெய்தி
யோகையி னணிபார்த் துலாவுஞ் சங்கஞ்
சென்றுகாண் பவரிது தினம்புதி தாகவி
னின்றுதா னமைந்ததா மெனுமெழிற் சங்க
மணியினோ பொன்னினோ வாய்ந்ததென் றெனைவரு
துணிவதற் கரிய சுடர்கிளர் சங்க
மலர்மண மளாய்ச்சிறு வந்துசா ளரத்தா
லுலவுபு சுகந்தர வோங்கிய சங்கம்
பரமத மறுப்புமெய்ப் பாங்குறுஞ் சைவத்
திரமத நிறுப்புந் தேங்கிய சங்க
மாறெதிர் தகையினு மருஞ்சுவைக் கவிக்கு
மாரியி னிதிமழை வழங்குஞ் சங்கம்
வித்தையி னசைகெழீஇ மிடிகோட் பட்டுள
மெய்த்தவர்க் கிருநிதி யீந்தருளு சங்க
குற்றமுள் ளனவொரீஇக் குடிநிதம் புரக்குங்
கொற்றவ ரமாத்தியர் குலாவிடுஞ் சங்கம்
வெற்றவெங் கதத்த வேத்திரக் கரத்தருங்
கற்றகா விதியருங் கலந்திடுஞ் சங்கஞ்
சனம்பல விறையாய்த் தருவன பிறவொடு
தனம்பல வணிபல தழைத்திடுஞ் சங்க
நூற்க ணெலாம்படர் நுண்மதிப்
பாற்கர சேது பதிவாழ் சங்கமே". [20]

பலதுறை நூல்களையும் கற்றுத் துறைபோகிய பாற்கரசேதுபதி தேவை நாட்டை அரசு புரிதலால் பல்வேறு துறை வல்லாரும் தங்கள் வித்தகம் காட்டிப் புகழ்நாட்டுவான் சேதுபதி அரசவையை நாடி வந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் பலரும் குழுமி உள்ள பல்வேறு குழுக்களும் கூடியுள்ள பாற்கர சேதுபதியின் சபை பல்வேறு

வித்வசபையும் ஒருங்கு கூடியுள்ள சிறப்புடன் காட்சியளிக்கும் மாண்பினை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

துறவியர் சங்கம்

"எண்ணிய எண்ணியாங்கு எய்தலான் செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்பது திருக்குறள். அதனை உணர்ந்தவர் அன்புருவாகி ஆசைவேர் பறித்து புண்ணிய சிந்தனையுடன் இறைவனுடைய திருவருள் சிந்தனையை யன்றி மன்றொன்று பற்றாது இருப்பர். அவர் வாழ்வு துன்பம் அற்ற இன்ப நிலையில் திளைப்பது; அத்தகு சான்றோர் பலரும் பாற்கர சேதுபதியின் அவைக்கு அணிகலனாக வீற்றிருப்பர்.

சேது முதலான இராமேச்சுர தீர்த்தமாடி துன்பவாதனை நீங்கி இராமநாதபுரம் வந்து திருமாலின் அவதாரமாகிய பாற்கர சேதுபதியின் தரிசனத்திற்காகக் காத்திருக்கும் பலரும் கூடிடும் சங்கம் சேதுபதிஅரண்மனையின் ஒருபால் உள்ளது.

சைவ சமயம் சாத்திரம் தோத்திரம் என்னும் இருதிறனுடையதாகும். அவற்றைக் கற்று மேம்பட்ட அறிஞர்கள் சித்தாந்த சாத்திரம் கூறும் மெய்ப்பொருள் துணிந்து அதுபற்றுக்கோடு எனத் தெளிந்து பற்றி சித்தம் ஒடுங்கிய கொள்கைச் சான்றோர் பலரும் நிறைந்தொரு பால் கூடியுள்ள சங்கம் ஒரு பால் உள்ளது.

புண்ணிய தீர்த்தம் ஆட தீர்த்தயாத்திரை புறப்படும் இறையருள் வேட்கையுடைய அன்பர்கள் யாத்திரை தானம் அரசரிடம் பெறுவது செம்பொருள் எனப்படும். அவருடைய திருக்கரங்களில் பெறுவான் வேண்டிய மக்கள் கூடியுள்ள சங்கம் ஒருபாலுள்ளது. மூதறிவின் விளைந்த சொல்மலர் கொண்டு உயிர்க்கு அமுதெனக் கவிதொடுக்கும் புலவர்கள் ஒருபால் தம் வித்தகங்காட்டக் குழுமி அரசவைக்குப் புகழ் சேர்க்கின்றனர். புனித மலர் கொண்டு மந்திரச் சொற்களோடு அரசரை அன்புர ஆசி வழங்கும் அந்தணர்கள் ஒருபால் குழுமியுள்ளனர். மந்திரமும்

தந்திரமும் மருந்துமாகி பிணிதீர்க்கும் தக்கவர் ஒருபால் குழுமியுள்ளனர்.

வானவர் நாட்டரசனும் நாகநாட்டு அரசனும் பாற்கர சேதுபதி நகரின் எழில் கண்டு இங்கு இத்தேவை நகரை விரும்பிக் காதலித்து இங்கேயே உலாவருகின்றனர். இந்நகருக்கு வருவோர் இதன் அழகினைக் கண்டு இன்று தான் அலங்கரித்திருக்கின்றனர் என்று நாள்தோறும் புதிது புதிதாக வருபவர் நினைக்கும்படி இதன்எழில் அமைந்து காண்பவரை வியப்பில் ஆழ்த்துகிறது. இதன் ஒளியினைப் பார்த்து மாணிக்கக் கற்களாலும் பொன்னாலும் அணி செய்திருப்பார்களோ என நினைக்கத் தூண்டும்படி நகரில் ஒளி வெள்ளம் வீசுகிறது.

பண்ணைகளிலிருந்தும் மலர்ச் சோலைகளிலிருந்தும் வரும் தென்றல் சாளரங்கள்வழி இல்லம்தோறும் மணம் பரப்புகின்றது.

சமயக் கணக்கர் தம்தம் சமய மாண்பினை பாங்கறிந்து எடுத்துரைக்கும் பட்டிமண்டபங்கள் நடத்துவோர் சங்கம் ஒருபால் குழுமியுள்ளது.

பாற்கர சேதுபதி அரசு தேவை நகரில் அருஞ்சுவைக் கவிதைக்கு மழை எனப் பொன்மாரி பொழிவதைக் காண்போர் சங்கம் ஒருபால் உள்ளது.

கல்விப் பொருளே பொருள் என விரும்பிக் கல்வியைத் தவமாகக் கற்கும் மெய்த்தவர் வாழ்க்கையில் பொருளின்றி வாடாமல் வறுமை நீங்க பெருநிதி வழங்குதலால் பொருள் பெறுவான் கூடியுள்ள மெய்த்தவர் சங்கம் ஒருபால் உள்ளது.

குற்றம் நீக்கி நீதி பரிபாலனம் செய்யும் அமைச்சர்களும், படைக்கருவிகளைப் பயிற்றும் காவிதியரும் எனப் பலதிறத்தாரும் குழுமிடும் கூட்டம் தேவை நகரில் யாண்டும் நிறைந்துள்ளன.

நாட்டுச் சிறப்பும் நகர்ச் சிறப்பும் புலவர் பாடும் புகழுடையன. சிவசம்புப் புலவர் பாற்கர சேதுபதியின் நகர்ச் சிறப்பை

உளங்கொள்ள எடுத்துரைத்து ஒரு நகரில் பாராட்ட வேண்டிய பல்துறை மாண்புகளையும் போற்றியுரைக்கும் திறம் இப்பாடலில் கற்று அறிதற்பாலது.

வெண்பா

"சங்கந் தொலைந்தபினுந் தாதாக்கள் பல்லோரா
லங்கங்கு நின்றதமி ழவ்வாறு-பொங்க
மனமுவந்த பாற்கரனேர் மன்னவரை யின்னு
மனமுவந்த தேவருளா னா" (21)

பலஆயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் கலைக் கழகங்களை அமைத்து இயல், இசை, நாடகம் என முத்தமிழைப் போற்றி அது தொடர்பான அறுபத்து நான்கு கலைகளையும் பேணி கலை நிறைந்த வாழ்வு நடத்தினர். ஆனால் கடல்கோள் நிகழ்ந்து முச் சங்கங்களும் அழிந்ததாக நூல்களும் ஆய்வுகளும் தெளிவுறுத்துகின்றன. அதனால் தமிழர் வாழ்வு சிதைந்தது; கலைஞர்களும் பேணுவாரின்றி அவலமுற்றனர்.

கலைக்கழகங்கள் அழிந்தபின்பும் ஆங்காங்கு கலை ஆர்வமிக்க ஆர்வலர் சிலர் கலையையும் கலைஞர்களையும் போற்றினர். ஆனால் திட்டமிட்டுக் கலைவளர்ப்பரில்லை. பாற்கர சேதுபதி ஒருவரே தமிழகத்தில் பண்டைக் காலத்தில் தமிழ்ச் சங்கம் இருந்தது போல நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். வானவர் நாட்டு அரசனும் செய்ய முடியாத அருஞ்செயலைப் பாற்கரசேதுபதி ஒருவரே செய்துள்ளார் எனப் புலவர் பாராட்டுவது ஏற்புடைய உண்மையேயாகும்.

பாற்கர சேதுபதியின் அண்ணன் பாண்டித்துரைத்தேவர்; பாற்கர சேதுபதியின் இடம், பொருள், ஏவல் அனைத்தும் பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கம் அமைக்கப்பயன்பட்டது என்பது ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது. பாற்கர சேதுபதியின் அருளாணையை மேற்கொண்டே தேவர் செயல் வீறுபெற்றது.

(தொடரும்)

புலவர் குழந்தையின் திருக்குறள் சிந்தனைகள்

செ. வெங்கடேசன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

புலவர் குழந்தை கவியார்வம் மிக்கவர். தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்கள் பலவற்றையும் நன்கு கற்றுத்தெளிந்தவர். அத்துடன் ஆய்வுக்கண் கொண்டு தமிழ் இலக்கியங்களை விமர்சிக்கவும் அவர் தவறவில்லை.

பழைய எண்ணங்களினின்று விடுதலைபெற்று, தொலைநோக்குச் சிந்தனையாளராய்த் திகழ்ந்தவர். திருக்குறள் மீது அவர் தணியாத ஆர்வம் கொண்டார். திருக்குறளை நன்கு ஆய்ந்து நோக்கி புதிய பார்வையில் பகுத்தறிவுச் சிந்தனையில் பலரும் பாராட்டும் வண்ணம் உரை எழுதியவர்.

புலவர் குழந்தை திருக்குறளின் உண்மை நிலையை உலகுக்கு உணர்த்த முயன்று வெற்றிகண்டவர். வள்ளுவத்துக்கு மாறுபட்டு அயலார் கொள்கைகள் பல திருக்குறள் உரையாசிரியர்கள் மூலம் புகுத்தப்பட்டுள்ளன. அந்நிலையை மாற்றி எல்லாத் தமிழ் மக்கட்கும் எளிதில் புரியும் வண்ணம் இவர் உரையாத்துள்ளார்.

குறள் ஈடுபாடு

புலவர் குழந்தை தாம் எழுதிய ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரைக்கும் உரிய தமிழ்ப்பாட நூலுக்கு வள்ளுவர்வாசகம் என்று பெயர் வைத்தார். ஆறாம் வகுப்பு முதல் பதினொன்றாம் வகுப்புவரைக்கும் உரிய இலக்கண நூலுக்கு வள்ளுவர் தமிழ் இலக்கணம் என்று பெயரிட்டார். தம்முடைய படைப்புக்களை வெளியிடும் வெளியீட்டகத்துக்கு வள்ளுவர் பதிப்பகம் என்று பெயர் வைத்து மகிழ்ந்தார்.

1943, 1948 ஆண்டுகளில் நடந்த திருக்குறள் மாநாடுகளில் முக்கியப் பங்காற்றினார்.

திருக்குறள் தமிழர் வாழ்வுக்குச் சட்ட நூல்; உலகப் பொதுமறை; பண்டைத் தமிழர் பண்பாட்டுக்குச் சான்றாகத் திகழ்வது; எக்காலத்துக்கும் நின்று திகழ்வது; நிகரற்ற உயரிய நூல் என்பது அவர் கருத்தாகும். அதற்கேற்பப் பகுத்தறிவுக் கண்கொண்டு உரை யாத்துள்ளார்.

அறவோர்

திருவள்ளுவரைப் புலவர் குழந்தை அவர்கள் இலக்கியப் படைப்பாளியாக மட்டும் எண்ணாமல் பல படிமேலே சென்று அறவோர் என்று பாராட்டிக் கூறுகின்றார்.

'சான்றாக அந்தணர் நூற்கும்' (543) என்னும் தொடருக்கு புலவர் குழந்தை அவர்கள் 'அறவோர் செய்த நூல் என்பார் (553) அறவோர்' என்று உரை விளக்கத்தில் வியந்து கூறுகின்றார்.

முதல் அதிகாரம் பத்துக் குணங்கள்

அறத்துப்பாலில் முதல் அதிகாரத்தில் அமைந்துள்ள பத்துக் குறட்பாவின் கருத்துக்கள் பத்துக் குணங்களையே குறிப்பிடுவதாக அமைந்துள்ளன என்கின்றார். பத்துக்குணங்கள்

1. முதன்மை
2. உண்மை அறிவு
3. உயர்ந்த அறிவு
4. விருப்பு வெறுப்பின்மை
5. முதன்மையான உண்மைப்புகழ்
6. அவாவின்மை பொய்தீர் ஒழுக்கம்
7. ஒப்பில் உயர்குணம்
8. அறஉணர்ச்சி, செந்தண்மை
9. எளிமைக்குணம்
10. இறைநலம்

இறைநலம் என்பது முதன்மை நலம் எனக் கூறி மக்கள் முதன்மையாகிய குணங்களை அடைய வேண்டும் என்பதே இவ்வதிகாரத்தின் பொருளாகும். முதன்மையாகிய மேலேகண்ட பத்துக் குணங்களையும் மக்கள் அடையவேண்டும் எனப் புலவர் குழந்தை வலியுறுத்திக் காட்டுகின்றார்.

ஆன்மீகவாதிகள்எனக் கூறிக்கொண்டு, திருக்குறளுக்கு உரை செய்துள்ள பிற உரையாசிரியர்களுடைய நிலையினின்றும் புலவர் குழந்தையின் திருக்குறட்சிந்தனை உயர்ந்து நிற்பதை அறியலாம்.

திருக்குறட் சொற்கட்கு அவர் உரைகூறும் பண்பு இனிமை உடையது. சான்றாக,

கடவுள்வாழ்த்து	– இறைநலம்
ஊழ்	– முறைமை
ஆதிபகவன்	– முதன்மையானவன்
இறைமாட்சி	–அரசனது நற்குணநற்செய்கைகள்

முதலிய விளக்கங்களைக் கருதலாம்.

அதிகாரத் தலைப்புப் பெயர்கள்

புலவர் குழந்தை அதிகாரத் தலைப்புப் பெயர்கள், அதிகாரத்தில் வரும் சொல் மற்றும் அதிகாரப் பொருள் ஆகியவற்றைக் கொண்டே அமையும் என எண்ணுகின்றார்.

ஐந்தாவது திருக்குறளில் இறைவன் என்றும், பத்தாவது திருக்குறளில் இறைவன்என்றும் வருகின்ற சொற்களை வைத்தே கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தை இறைநலம் என மாற்றிக் குறிப்பிடுகின்றார்.

கடவுள் என்ற சொல் ஈண்டு இவ்வதிகாரத்திலோ நூலில் மற்ற இடங்களிலோ கையாளப்படவில்லை. கடவுள் வாழ்த்து என்ற தலைப்பு (அதிகாரப் பெயர்கள்) பிற்காலத்தோரால் இட்டுக்கட்டிச்

சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலவர் குழந்தையின் உட்கருத்தாகும்.

ஊழ் விளக்கம்

மனிதனின் வயது, உடலமைப்பு ஆகியவற்றுக்கேற்றவாறு குணங்கள் அமையும்.

கோபம்	சாந்தம்
விடாப்பிடி	விட்டுக்கொடுத்தல்
முரட்டுத்தனம்	எளிமைத் தனம்
விருப்பு	வெறுப்பு
ஒழுக்கம்	ஒழுக்கமின்மை
வாய்மை	பொய்மை
தன்னலம்	பொதுநலம்
படாடோம்	எளிமை
ஆசை	வெறுப்பு
நட்பு	பகை

இவையாவும் பிறவிக்குணங்கள் அல்லது இயற்கைக் குணங்கள் எனப்படும். உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகி ஊழுக்கு இவை துணை நிற்கும்.

இவ்வூழ் மக்களின் இயற்கைக்கு மேற்பட்டதாதலின் தெய்வம் (மேலானது) எனவும் பெயர் பெறும். ஊழின் இயல்பறிந்து அதற்குத்தக நடந்துகொள்ளுதலும் போகூழிற்கு வருந்தாமையும் இதன் பயன் என புலவர் குழந்தை முடிவு கூறியுள்ளார்.

அதிகாரத் தலைப்பு விளக்கம்

ஊழியலில் : *ஊழ்* என்னும் அதிகாரத்தில் ஊழ் எனும் சொல்லுக்கு முறைமை என்றும் 'உலகியல் நிகழும் முறைமை' என்றும் 'உலகியலின் இயற்கை நிகழ்ச்சி' எனவும் பொருள் காண்கின்றார்.

'பொருளும், காலமும், செயல்படும் தகுதியும் சுற்றுச்சார்பின் (சுற்றுப்புற சூழலின்) தகுதியும், மனித எண்ணத்தின் முயற்சியின் செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும், ஒவ்வாது வருதலும்' என ஊழ் எனும் சொல்லுக்கு உலகியல் நெறியுணர்ந்து புலவர் குழந்தை அவர்கள் விளக்கம் தருகின்றனர்.

ஊழும் குணங்களும்

மக்கட்கு இயல்பாக அமைந்துள்ள குணங்கள் பல. அவையும் ஊழுக்குத் துணை நிற்கும். சிலர் நல்லனவே செய்வர், சிலர் தீயனவே செய்வர். இது அவரவர் இயற்கைக் குணம் ஆகும்.

ஊழ் : எண்ணம் செயலின் எதிரொலி

அறிவின் விரிவும், அறியாமையும், ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் எதிரொலிகளாக அமைகின்றன.

ஊழால் தீயனவும் நல்லனவாகின்றன. நல்லனவும் தீயனவாகின்றன. நல்லனவாதலை ஆகூழ் எனவும், தீயனவாதலைப் போகூழ் எனவும் கூறுவர்.

நல்லவை, தீயவை என்பன பொருள், காலம், செயல், சுற்றுச்சார்பு ஆகியவற்றுடன் சார்ந்திருத்தல் எனக் கூறுவர். முடிவாக ஊழ் மனிதனின் எண்ணம், செயலின் எதிரொலியே என்பது தெளிவாகும் எனப் புலவர் குழந்தை அவர்கள் தெளிந்துரைத்துள்ளார்.

அதிகார மாற்றம்

பரிமேலழகர் அறத்துப்பால் இல்லறவியலில், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் என அமைத்துள்ளதை புலவர் குழந்தை அவர்கள்,

அன்புடைமை
இன்சொல்
விருந்தோம்பல் என மாற்றிக் கூறுகின்றார்.

இல்வாழ்விற்கு இன்றியமையாப் பண்புகளாகிய அன்புடைமை, இன்சொல், விருந்தோம்பல் ஆகிய மூன்றும் முறையே புலவர் குழந்தை அவர்களால் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம், இல்வாழ்க்கையை மேற்கொண்டவன் முதலில் சுற்றத்திடத்தும், விருந்தினரிடத்தும் அன்பு காட்ட வேண்டும். பின் விருந்திட்டுப் போற்றவேண்டும் என்பது உயர்வு.

உள்ளத்தில் அன்பு கொண்டு முகத்தில் மெய்ப்பாடு காட்டி, வாய்ச்சொற்களால் இனிமையை வெளிப்படுத்தி, விருந்தோம்பலால் உபசாரம் செய்ய வேண்டும் எனப் பகுத்தறிவாளர் புலவர் குழந்தை அறிவுறுத்துகின்றார்.

பொருட்பாலில் அமைச்சியலை, அமைச்சு, சொல்வன்மை, அவை அறிதல், அவை அஞ்சாமை, குறிப்பறிதல், வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, தூது, மன்னரைச் சேர்ந்தொழுகல் எனப் பாகுபடுத்தி முறைசெய்துள்ளார்.

அமைச்சர் தன்மையைக் கூறுவதால், அமைச்சு முதலிலும், சொல்லாற்றல் தேவைப்படுவதால் அடுத்து சொல்வன்மையும் அவையின் தன்மையறிந்து நிற்க வேண்டுமாதலால், அவையறிதல் அடுத்தும், அவைக்கு அஞ்சாமை தேவை ஆதலால் அவை அஞ்சாமை அடுத்தும், அவைக்குறிப்பறிதல் முக்கியமாதலால் குறிப்பறிதல் அடுத்தும், செய்யும் செயல் தூய்மையாக இருக்க வேண்டும் ஆதலால், வினைத்தூய்மை அடுத்தும், வினை உறுதி வேண்டி, வினைத்திட்பம் அடுத்தும் வினையாற்றல் தெளிவுவேண்டி வினைசெயல் வகை அடுத்தும், அமைச்சரே தூது மேற்செல்வராதலால், தூது அடுத்தும், மன்னரிடம் பழக வேண்டிய முறைகுறிக்க மன்னரைச் சேர்ந்தொழுகல் அடுத்தும் வைக்கப்பட்டன.

பொருட்பாலில் புலவர் குழந்தை அவர்கள் இங்ஙனம் அதிகாரங்களை முறைவைத்து விளக்கிச் செல்கின்றார்.

முடிவுரை

திருக்குறள் என்ற தமிழ் மறையை யாத்த திருவள்ளுவரின் உயர்ந்த கருத்துக்களை புலவர் குழந்தை அவர்கள் இன்றைய காலச்சூழ்நிலைக்கேற்ப நடைமுறைக்கேற்ப விளக்குகின்றார். திருவள்ளுவருடன் புலவர் குழந்தை ஒன்றி நின்று மக்கள் சமுதாயம் மேன்மை பெறஉரை செய்துள்ளார். இவரால் போலி நிலைகள் கடியப்படுகின்றன; உண்மை நிலைகள் போற்றப்படுகின்றன.

நல்ல எண்ணங்கட்கும், நல்ல முடிவுக்கும் புலவர் குழந்தையின் உரை வழிகோலுகின்றது.

பரிமேலழகர், மணக்குடவர் தொடங்கி நூற்றுக்கணக்கானோர் திருக்குறளுக்கு உரை எழுதி உள்ளனர். பகுத்தறிவு உலகில் ஊறித்திளைத்தோர் இருபதுக்கும் மேற்பட்டோர் திருக்குறளுக்கு உரை யாத்துள்ளனர். இன்னோர் அனைவர்க்கும் முன்னோடியாய்த் திகழ்ந்து ஒளிவிட்டுப் பிரகாசிப்பவர் புலவர் குழந்தை என்று கூறலாம்.

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,
இரா. சதாசிவம்
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

இல்ல முகவரி

இரா. சதாசிவம்
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் நா. பாலுசாமி
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsan
Madurai - 62500
TAMILNADU, S.I

பெறுநர் / To,